சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 07.04.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **32/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-10 |
| சாட்சியின் பெயர் | : | தமிழ்மாறன் |
| தந்தை பெயர் | : | பிச்சைமுத்து |
| கிராமம் | : | கண்ணந்தங்குடி |
| தாலுக்கா | : | ஒரத்தநாடு |
| தொழில் | : | காவல்துணை கண்காணிப்பாளர் |
| வயது | : | 57 |

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். தற்பொழுது நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள பொருளாதார குற்றப்பிரிவில் நான் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன் நான் இதற்கு முன்பு திருவாரூர் மாவட்டத்தில் நன்னிலம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்த போது கடந்த 16.02.2025 ஆம் தேதி வலங்கைமான் காவல் நிலைய குற்ற எண்.50/2025 பா.நி.ச பிரிவுகள் 296( b), 131, 133, 351(3) உ/இ ப.ச & ப.ப (வ.கொ.த) சட்டப்பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), 3(2)(va) -ன் கீழ் அப்போதைய வலங்கைமான காவல் நிலைய காவல் ஆய்வாளர் முத்துலெட்சுமி என்பவரால் பதிவு செய்யப்பட்டிருந்த அ.சா.ஆ-4 ஆன முதல் தகவல் அறிக்கையினை திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் அலுவலக செயல் முறை ஆணை C.No.17/SJ&HR/TVR/2025, Dt:16.02.2025 அவர்கள் என்னை இந்த வழக்கினை புலன் விசாரணை செய்யவேண்டும் என உத்தரவிட்டிருந்தார். அந்த உத்தரவு நகல் **அ.சா.ஆ-5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 16.02.2025 ஆம் தேதி மதியம் 01.00 மணிக்கு சம்பவ இடமான செம்மங்குடி புதுத்தெருவில் அ.சா-1 சுந்தர்ராஜ் அவர்கள் வீட்டின் எதிரில் சென்று சாட்சிகள் அ.சா-7 பாலகுமார் மற்றும் விஜயராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஒன்று தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ-6** ஆகவும் மற்றும் மாதிரி வரைபடம் **அ.சா.ஆ-7** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

2. அ.சா-1 சுந்தர்ராஜ், அ.சா-2 பாஸ்கரன், அ.சா-3 ரமணன், அ.சா-4 சக்ரவர்த்தி, அ.சா-5 விஜயராஜ், அ.சா-7 பாலகுமார் ஆகியோர்களை 16.02.2025 ஆம் தேதி தனி தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 17.02.2025 ஆம் தேதி அன்று சாட்சிகள் கனகவள்ளி,

வேல்முருகன், செல்வராணி, ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிக்கும், அ.சா-1 சுந்தர்ராஜ் என்பவருக்கும் சாதி சான்றிதழ் கோரி வலங்கைமான் வட்டாட்சியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்தேன். எதிரிக்கும் அ.சா-1 சுந்தர்ராஜ் என்பவருக்கும் சாதி சான்றிதழ் வழங்க அறிக்கை வழங்கிய கிராம நிர்வாக அலுவலர் கோமதி, வருவாய் ஆய்வாளர் ஏஞ்சல்ஸ் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அ.சா-1 சுந்தர்ராஜ் என்பவர் இந்து பறையன் என்றும், எதிரி இந்து கள்ளர் என்றும் சாதி சான்றிதழ் வழங்கிய வலங்கைமான் வட்டாட்சியர் ஸ்ரீராம் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் வழங்கிய அ.சா.ஆ-8 மற்றும் 9 ஆன சாதி சான்றிதழ்களை பெற்றேன். பின்னர் அ.சா-1 சுந்தர்ராஜ் பணி செய்ததர்கான சான்றிதழ் வழங்கிய வலங்கைமான் வட்டார வளர்ச்சி அலுவலர் அ.சா-6 சிவக்குமார் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் வழங்கிய அ.சா.ஆ-2 ஆன சான்றிதழை பெற்றேன். அ.சா-1 சுந்தர்ராஜ் என்பவருக்கு அ.சா.ஆ-3 அன மனு ரசீது வழங்கிய உதவி ஆய்வாளர் அ.சா-8 சுப்பிரமணியன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கினை பதிவு செய்த காவல் ஆய்வாளர் அ.சா-9 முத்துலெட்சுமி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் எதிரி மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று தஞ்சாவூர் முதலாவது மாவட்ட மற்றும் கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றதால் அவரை கைது செய்யவில்லை. இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது 04.04.2025 ஆம் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். அ.சா-5 விஜயராஜ் மற்றும் அ.சா-7 பாலகுமார் ஆகியோர் நீதிமன்றத்தில் அளித்துள்ள சாட்சியங்களில் வழக்கு விபரம் தெரியாது என்றும், அவர்களை போலீசார் விசாரணை எதுவும் செய்யவில்லை என்று கூறியிருந்தால் அது தவறு.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

திருவாரூர் கண்காணிப்பாளர் அவர்கள் என்னை விசாரணை அதிகாரியாக நியமித்து பிறப்பித்த உத்தரவு எனக்கு எத்தனை மணிக்கு கிடைத்தது என்றால் சுமார் மதியம் 12.15 மணியிருக்கும். திருவாரூர் to நன்னிலம் எவ்வளவு நேரத்தில் செல்லலாம் என்றால் 20 நிமிடத்தில் செல்லலாம். நன்னிலத்திலிருந்து வலங்கைமான் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 30 கி.மீ இருக்கும், செல்வதற்கு அரை மணி நேரம் முதல் முக்கால் மணி நேரத்தில் செல்லாம். அ.சா.ஆ-1 புகார் என்பது புகாரினை நன்கு எழுத தெரிந்த நபர்களால் எழுதப்பட்டுள்ளது என்றால் எழுதத்தெரிந்தவர்களால் எழுதப்பட்டுள்ளது. இந்த புகாரை யார் எழுதியவர்கள் யார் என்று நான் விசாரணை செய்துள்ளேனா என்றால் இல்லை. புகாரில் விசாரணைக்கு பின் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுள்ளது என்று சொன்னால் ஆமாம். யார் யாரை விசாரணை செய்து இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்பது குறித்து நான் எதுவும் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. புகார் அளிக்க யார் யார் வந்திருந்தார்கள் என்ற விபரத்தை நான் தனியாக விசாரணை செய்தேனா என்றால் இல்லை. இந்த புகார் கொடுத்தபோது வழங்கியதாக சொல்லப்படும் மனு ரசீது என்பது அ.சா.ஆ-3 என்பதை உறுதி செய்துகொண்டேனா என்றால் சரிதான். அ.சா.ஆ-1ல் உள்ள கையெழுத்தும் அ.சா.ஆ-3 ல் உள்ள சுந்தர்ராஜ் என்பவரின் கையெழுத்தும் வெவ்வேறு என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ-3 ஆன மனு ரசீது தயார் செய்து பிரிண்டவுட் எடுக்கப்பட்டது 17.02.2025 மாலை 6.09 மணி என்றால் சரிதான். அ.சா.6 சிவக்குமார் என்பவரை நான் விசாரணை செய்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்துள்ளேனா என்றால் பதிவு செய்துள்ளேன். அதை நீதிமன்றத்திலும் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு ஆவணத்தில் முரளி வட்டாரா வளர்ச்சி அலுவலரை தான் விசாரித்து வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். நான் பதிவு

செய்துள்ள வாக்குமூலத்தில் சிவக்குமார் என்பதற்கு பதிலாக முரளி என்பவரிடம் வாக்குமூலம் வாங்கியுள்ளதாக தவறுதலாக குறிப்பிட்டுள்ளேன். சாட்சி பட்டியலிலும் அவ்வாறே தவறுதலாக குறிப்பிட்டுவிட்டேன். ஸ்ரீராம் என்பவர் சாதி சான்றிதழ் வழங்கியுள்ளதாக நான் கூறியுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. செம்மங்குடி புதுத்தெருவில் எதிரியின் வீடுதான் கடைசி வீடு என்று சொன்னால் ஆமாம். எதிரியின் வீட்டிற்கு பின்னர் வயல் வெளி தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த வயல் வெளிகளுக்கு மனிதர்கலோ அல்லது கால்நடைகலோ செல்ல வண்ணம் இரும்பு வேலி போட்டு தடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சம்மந்தமாக நான் பார்வையிடவில்லை. எதிரியின் வீடும் அ.சா-1ன் வீடும் எதிர் எதிர் திசையில் உள்ளது என்றால் நேர் எதிர் திசையில் இல்லை சற்று தள்ளி உள்ளது. எதிரி வீட்டிற்கு நேர் எதிராக செல்வராணி வீடு உள்ளது என்றால் சரிதான். செல்வராணி வீட்டிற்கு கிழக்கில் வேறு வீடுகலோ கட்டுமானங்கலோ இல்லை என்று சொன்னால் சரிதான். இந்த எதிரியின் வீடு கூரை வீடு என்று சொன்னால் சரிதான். எதிரி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலத்தில் எதிரி தனது வீட்டில் பராமரிப்பு பணிகளோ அல்லது கட்டுமான பணிகளோ செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி வீட்டிற்கும், அ.சா-1ன் வீட்டிற்கும் இடையில் உள்ள சிமெண்ட் சாலையின் நடுவில் மின் கம்பம் நடபட்டுள்ளது என்றால் எதிரி வீட்டின் அருகில் நடபட்டுள்ளது. அ.சா-1ன் வீட்டிற்கு செல்லக்கூடிய மின் ஒயர் எதிரி வீட்டிலிருந்து நேர் எதிர் திசையில் செல்வதால் எதிரி வீட்டிற்கு எந்தவித பாதிப்பும் இல்லை என்றால் சரிதான். அவ்வாறு தனக்கு எதுவும் பாதிப்பு ஏற்படாத மின் ஒயரை மாற்றி கட்ட கூற வேண்டிய அவசியம் எதுவும் எதிரிக்கு கிடையாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.சா-1ன் புதுத்தெருவில் உள்ள வீடு பழுதடைந்து குடியிருக்க இயலா நிலையில் உள்ள வீடு என்று சொன்னால் வீட்டிற்குள்

சென்று பார்த்தால் தான் தெரியும். அவ்வாறு குடியிருக்க தகுதியற்ற வீடு என்பதால் அ.சா.-1 அந்த வீட்டில் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் என நான் அடையாளம் காட்டியுள்ள நபர்கள் எவரும் சம்பவ இடத்தை சேர்ந்தர்கள் அல்ல என்றால் அதே ஊரை சேர்ந்தவர்கள் ஆனால் அந்த தெருவை சேர்ந்தவர்கள் அல்ல. நான் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கையில் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த எதிரியின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களால் கொடுக்கப்பட்ட பொய் புகாரினை பின்னிட்டு பெற்று முன் தேதியில் கொடுக்கப்பட்டது போல் ஒரு தவறான ஆவணத்தை உற்பத்தி செய்து அதனை பயன்படுத்தி எதிரி மீது தவறான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும், நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றாலும், பின்னாலில் வழக்கிற்கேற்ப என்னுடைய அலுவலகத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து முறையான விசாரணை இன்றி எதிரி மீது தவறாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எதிரி குற்றமற்றவர் என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த
நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு
செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம்
படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என்
முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.04.07 18:20:38 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.